[1990 சனவரி 25

நெல்லிக்குப்பம் ஈ. ஐ. டி. பாரி நிறுவன தொழிலாளர்களின் கோரிக்கை

குறுகியகால வினா *8017—திரு. சி. கோவிந்தராஜன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லிக்குப்பம், ஈ.ஐ.டி. பாரி நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், தொழிற்சங்க அங்கீகாரம், தொழிலாளர் ஆணையரின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல், ஊதிய உயர்வு மற்றும் கோரிக்கைகளை வலியுறுத்தி 21—1—1990 முதல் உண்ணாவிரதம் இருந்துவருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுடைய கோரிக்கைகளை தீர்த்து உண்ணாவிரதத்தை முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,
(அ) மற்றும் (ஆ) : தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து தொழிலாளர் அலுவலர் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, இந்த ஈ.ஐ.டி. பாரி தொழிற்சாலை பழைய தொழிற்சாலை. டி.ஐ. சைக்கிள் குரூப் நிறுவனம் அதை மேற்கொண்டதிலிருந்து அங்கு தொழில் உறவு சரியில்லை. இந்த அரசு ஏற்பட்டவுடன் கொள்கை குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் முதலாளிகளுக்குள் ஏற்படக்கூடிய ஒப்பந்தம், அவார்ட்ஸ், ஃபைண்டிங்ஸ் எதுவாக இருந்தாலும் கறாராக இந்த அரசு அமுல்படுத்தும் என்று கொள்கை குறிப்பிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்ணாவிரதம் 3 கோரிக்கைகளை வைத்து நடைபெறுகிறது. அவற்றில் ஒன்று ராஜா சுப்பிரமணியத்தினுடைய அவார்டை நிறைவேற்ற வேண்டும் என்பது. அது ஒரு கோரிக்கை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2, 3 நாட்களுக்கு முன்னால் சொன்னார். ஆட்சி மாறினாலும், அதிகாரம் மாறினாலும், சில அதிகாரிகளுடைய உணர்வுகள் மாறவில்லை என்று, அப்படிப்பட்ட ஒரு சில அதிகாரிகள் தொழிலாளர் நல இலாகாவிலும் இருக்கிறார்கள். அதையும் கருத்தில் கொண்டு இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, மேனேஜ்மெண்ட்டுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே கடந்த

1990 சனவரி 25]

4, 5 வருஷ காலமாக பல்வேறு வழக்குகள் போடப்பட்டு திருப்பி உச்ச நீதிமன்றத்தில் கமிஷன்ஸ் ஆஃப் லேபர் அவர்களே இதைப்பார்த்து தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று உத்திரவிடப் பட்டு அப்படி உத்தரவிடப்பட்டதன் காரணமாக கமிஷனர் ஆப் லேபர் அவர்கள் ஒரு ஆணையை பிறப்பித்தார்கள். ஆனால், அந்த மேனேஜ்மெண்ட், அந்த ஆணை எங்களுக்குச் சரியாக இல்லை, எங்களைச் சரியாக விசாரிக்கவில்லை என்று சொல்லி அதை ஏற்க மறுத்துக் கொண்டிருக்கிறது. ஜாயின்ட் கமிஷனர் ஆப் லேபர் அவர்கள் மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்று வதற்கு, குறிப்பாக தொழிலாளர்களுடைய கோரிக்கைகள், அதே போல உங்களுடைய சங்கத்தை அங்கீகரிக்கச் செய்தல் போன்ற மூன்று கோரிக்கைகளை, நீங்கள் வைத்திருக்கிற கோரிக்கைகளை இப்போது விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முடிவு ஏற்படும். இந்த அரசு எப்போதுமே தொழிலாளர் பக்கம் இருக் கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

10–10 மணி

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ஏற்கெனவே இருந்த லேபர் கமிஷனர் ஒரு தீர்ப்பை அளித்துவிட்ட பிறகு அந்தத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டியதுதான் அரசினுடைய பொறுப்பே தவிர, அந்தத் தீர்ப் புக்கு அவர்கள் பதில் கொடுப்பது என்று சொன்னால்,—சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினுடைய அடிப்படையிலே கொடுத்திருக்கக்கூடிய தீர்ப்பு அது—முதலில் அந்தத் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும். அதை அமுல்படுத்தாமல் அதற்கு மேலும், நிர்வாகத் தரப் பிலிருந்து வருவதை விசாரிப்பதில் அர்த்தமே கிடையாது. தொழில் கோர்ட் தீர்ப்பு கொடுக்கிறது என்று சொன்னால், அதற்கு மேல் அப்பீலுக்கு வேறு எங்காவது செல்ல வேண்டுமே தவிர, இதில்தான் அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்று நான் சுட்டிக்காட்டினேன். அந்தக் கோரிக்கை உள்பட 12 ஆண்டுக் காலமாக அவர்களுக்கு எந்தவிதமான ஊதிய உயர்வும் அளிக்கப் படவில்லை. தொழிற்சங்க அங்கீகாரமும் இல்லை. அதற் காக அவர்கள் கடந்த 21ஆம் தேதியிலிருந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவாகக் கேளுங்கள்.

திரு. சி. கோவிந்தராஜன் : நேற்றைய தினம் கூட மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதற்கு இந்த அரசு இடமளிக்காது என்று கூறினார்கள். நான் அதை எப்படி புரிந்துகொள்கிறேன் என்று சொன்னால், எந்தப்பகுதி மக்களும் தொழிலாளர் உட்பட அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ளக் கூடிய அளவுக்கு நிலைமை இந்த அரசில் இருக்காது என்றும்

[1990 சனவரி 25

அதையெல்லாம் நாங்கள் தீர்த்து வைப்போம்என்றுதான் அவர்கள் அப்படிக் கூறினார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, கடந்த 5, 6 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வரக்கூடிய அந்தத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைத் தீர்த்து வைத்து உண்ணாவிரதத்தை முடித்து வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரைச் சேர்ந்த லேபர் ஆபீசர் அவர்கள், பேச்சுவார்த்தையின்போதுகூட, தொழிலாளர்களை, நீங்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டியதில்லை, நாங்கள் விரைவாக அதைப் பேசித் தீர்த்து விடுகிறோம் என்று சொல்லியும், இன்றைக்கு ஜாயின்ட் கமிஷனர் ஆப் லேபர் அவர்கள் அதை ஆய்வு செய்து வருகின்ற நேரத்திலே அந்தத் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் தெரிவித்தார்கள். நேற்றைய தினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியது போலவே தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமையை இந்த அரசு உருவாக்காது, அதை விரைவாக முடித்துத் தருவதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதையே ஒரு கோரிக்கையாக ஏற்று அங்கே உண்ணாவிரதம் இருக்கின்ற தொழிலாளர்கள் உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ரமணி மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு தவறு செய்ததனால், அந்த உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது, எனக்குத் தெரிந்த வரையில். சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பை மீறி இருப்பது யார்? அந்த நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. பாரி கம்பெனி, அது ஒரு பெரும் முதலாளி கம்பெனி. அவர்களுக்கு இருக்கும்படியான ஆணவம், சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பை உடைத்து இருக்கிறது. லேபர் கமிஷனர், அவர்கள்தான் ஹையஸ்ட் அபீசியல், செக்கரட்டரிக்கு அடுத்தபடியாக இருக்கக்கூடியவர், லேபர் கமிஷனர். அவரே இந்தத் தீர்ப்பை அமல் ஆக்குவதற்காக, ஆலோசனை கொடுத்து எழுத்து மூலமாக ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். அதையும் தூக்கி எறிகிறார்கள். நீண்ட நெடுங்காலமாக அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தை கிட்டே வரவிடாமல், எந்தவிதமான காரணமும் இல்லாமல், சங்க அங்கீகாரத்தை அவர்கள் நாசமாக்குகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மீது அரசு நேரடியாக, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை நிறைவேற்றாததற்காக, என்ன சட்டத்தின் கீழ் ப்ராசிகியூட் பண்ண முடியும் என்பதையும் அதன்மூலம், அவர்களே வந்து முதலமைச்சர் அவர்களிடத்திலோ அல்லது தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இடத்திலோ பேசி செட்...

1990 சனவரி 25]

டில் பண்ண வேண்டும். அந்த முறையிலே நீங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். உண்ணாவிரதம் இருக்க இஷ்டப்பட்டு, உடம்பிலே சக்தி இல்லாதவன் கொழுப்பைக் கரைக்க உண்ணாவிரதத்தில் உட்கார மாட்டான். அவர்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இது குறித்து நடவடிக்கை எடுப்பீர்களா? நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று, கோரிக்கை மட்டுமல்ல, அந்தத் தொழிலாளர்களுக்கு ஏதாவது செய்வீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

10–15 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில மதிப்பீடு மற்றும் அமல்படுத்தும் குழு, மேற்படி சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுக்கப்படவேண்டுமென்று நிர்வாகத்திற்குப் பரிந்துரை செய்துள்ளது. ஆனால் குழுவின் பரிந்துரைப்படி நிர்வாகம் அங்கீகாரம் அளிக்க மறுத்துவிட்டது. அந்தக் குழுவிற்கு சட்டப்படியான அங்கீகாரம் இல்லை என்பதாலும், பரிந்துரையை அமுல்படுத்தாத பட்சத்தில் அந்தக் காரணத்திற்காக நிர்வாகத்தின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க இயலாது என்ற காரணத்தாலும் அந்தச் சங்கத்தை அங்கீகரிக்க எந்தச் சட்டத்தாலும் நிர்வாகத்தை ஆணையிட இயலாது என்று தெரிவித்திருக்கிறார்கள். நேற்று முன்தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் சொன்னதை, உடனடியாக லேபர் கமிஷனருக்குத் தெரிவித்து மறுபடியும் அவர்களை அழைத்துப் பேசவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். விரைவாக அழைத்துப்பேசி ஒரு நல்ல தீர்வு காண்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]